புதுடெல்லியில் நேற்று முன்தினம் (07.08.2025) நடைபெற்ற வேளாண் விஞ்ஞானி பாரத ரத்னா' எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டு நினைவு சர்வதேச மாநாட்டில் தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் தொடர்பான நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கும் குப்பையிலிருந்து,

எரிசக்தி தயாரிக்க ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் ஏதேனும் உள்ளதா?

மக்களவையில் - டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி

புதுடெல்லி, ஆக. 9 - திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 06 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில், மக்கும் குப்பையிலிருந்து எரிசக்தியை தயாரிக்கும் திட்டங்களுக்கு, ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும், எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்று ஒன்றிய அரசின் எரிசக்தி துறை இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் எரிசக்தி துறை இணையமைச்சர்; அளித்த பதில் வருமாறு :

தேசிய எரிசக்தி திட்டத்தின் கீழ், தமிழ் நாடு உள்பட 19 மாநிலங்களில் மக்கும் குப்பையிலிருந்து எரிசக்தி தயாரிக்க 298 திட்டங்களுக்கு ரூபாய் 374 கோடிகள் செலவில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாட்டிற்கென, ரூபாய் 22 கோடிகள் செலவில் 12 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், மக்கும் குப்பையிலிருந்து பெறப்படும் உயிர் வாயுவின் மூலமாக மின்சாரம் தயாரிக்கப்படுகிறது என்றும், பயோ சிஎன்ஜி மூலமாக சமையலறை அடுப்புகள் பயனடைகின்றன என்றும், உயிர் எரிவாயு, தொழிற்சாலைகளுக்கு பயனளிக்கின்றன என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாடு உள்பட 16 மாநிலங்களில் செயல்பட்டு வரும் 78 உயிர் எரிசக்தி திட்டங்களினால் 125 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது என்றும், தமிழ் நாட்டில் செயல்பட்டு வரும் 5 எரிசக்தி திட்டங்களின் மூலம் 7 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும், ஒன்றிய அரசின் இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் பதில் அளித்தார்.

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, தூயநெஞ்சக் கல்லூரி அருகில் புறப்பட்டு கலைஞர் திருவுருவச் சிலை வரை பேரணியாக சென்று அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், ஆர்.எஸ்.ஆனந்தன், டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், ஜெ.சர்மிளா, கே.பி.ஆர்.ஜோதிராஜன், எஸ்.ராஜேந்திரன் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

கலைஞர் நினைவு நாளில், முத்திரை பதிக்கும் இளைஞர் அணி!

தமிழ்நாட்டில் இன்று நாம் காண்கின்ற, அனுபவிக்கின்ற நவீனங்கள் அனைத்தையும் தன் சிந்தையில் செதுக்கிச் செயல்வடிவு தந்து, இந்தியாவுக்கே முன் மாதிரி மாநிலமாக உருவாக்கியவர் நமது உயிரினும் மேலான முத்தமிழறிஞர் கலைஞர். அவரது 7ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்ட் 7 அன்று, உணர்வெழுச்சியை ஊட்டியது கழக இளைஞர் அணி நடத்திய கருத்தியல் முன்னெடுப்பு நிகழ்ச்சி.

தன் சாவிலும் போராட்டத்தை நடத்திக் காட்டி நம்மையெல்லாம் ஆட்கொண்ட மானமிகு சுயமரியாதைக்காரரின் நினைவுநாளை, உண்மையிலேயே அவர் இருந்திருந்தால் விரும்பும் வகையில் அவரது நினைவைப் போற்றும் நாளாக்கியது, இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் முன்னெடுப்பு.

முரசொலி நாளேடும், கலைஞர் தொலைக்காட்சியும் இணைந்து நடத்தும் கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், இளம் திராவிட இயக்க ஆய்வாளர்களை ஊக்குவிக்க கலைஞர் நிதி நல்கைத் திட்டம் ஆகியவற்றை நமது திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 நூல்களையும் வெளியிட்டார். முதலிரண்டு திட்டங்களும் மாணவர்கள் நலனில் கழகம் கொண்டுள்ள அக்கறைக்கு தெள்ளத் தெளிவான சான்றாக இருக்கிறது.

திராவிட இயக்கச் சிந்தனை கொண்ட ஊடகர்களை உருவாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் அறிவார்ந்த ஊடகச் சமுதாயத்தை உருவாக்க அடிநாட்டியிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இதழியல் முன்னோடியாக முத்தமிழறிஞர் கலைஞரை உயர்த்திப் பிடிக்கும் இந்த முயற்சி மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற உள்ளது என்பதில் ஐயமில்லை.

பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியாதபடி அறிவிக்கப்படாத பாசிச நெருக்கடிக் காலகட்டத்தை உருவாக்கி இருக்கிறது ஒன்றியத்தை ஆளும் பாஜக. ஊடகர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டால் சுவாசத்தை நிறுத்துவோம் என்று நாடே சங் பரிவாரங்களின் வேட்டைக்காடாக மாற்றப்பட்டுள்ளது. பாஜகவின் பாசிச முகத்திரையைக் கிழிக்க முற்படும் யாவரும் காலவரையற்றுச் சிறைச்சாலை களில் அல்லப்படுகின்ற காலகட்டத்தில், அதனை எதிர்ப்பதற்கு வலுவான நான்காம் தூணாக ஊடகத் துறையை பலப்படுத்த உள்ளது கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்.

நாடெங்கும் கல்விச் நிலையங்கள், பாடத்திட்டங்கள் பாசிசத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறது. NCERT வெளியிடுகின்ற பாடப் புத்தகங்கள் எல்லாம் காவிமயமாக்கப்பட்டு, உயர்கல்விக்குச் செல்லுகின்ற மாணவர்களின் மூளையெல்லாம் காவிச்சலவை செய்யப்படுகிறது. கோமியமும் சாணமும் ஆய்வுப் பொருள்களாகவும், நாடெங்கும் சனாதனம் மட்டுமே பேசுபொருளாகவும் ஆக்கப்பட்டுள்ளது அத்தகைய காலகட்டத்தில், அந்தச் சதிகளை முறியடித்து நாட்டைக் காக்க இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்க வருகிறது கலைஞர் நிதி நல்கை திட்டம். அந்த ஆய்வுகளை பதிப்பிக்க தயாராக உள்ளது முத்தமிழறிஞர் பதிப்பம். இந்த முயற்சிகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் பாசிசத்துக்கு எதிராக இந்த நாட்டைக் காக்கும் ஒரே சக்தி என்பதை தெளிவாக்குகிறது.

திராவிட மாடல் பயிற்சிப் பாசறை, நீட் எதிர்ப்புக் கையெழுத்து இயக்கம், தொகுதிதோறு, கலைஞர் நூலகம், அங்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி, வாசகர் உரையாடல், இளம் பேச்சாளர்கள் தேர்வு, பாக இளைஞர்கள் தேர்வு என்று தொடர்ந்து கழகத்தின் வேர்களை வலுப்படுத்தும் இளந்தலைவரின் முன்னெடுப்புகளில் புதுப்பாய்ச்சலாக நேற்றைய அறிவிப்புகள் வந்திருக்கின்றன.

கலைஞர் தன் காலமெல்லாம் எதற்காகப் போரிட்டாரோ அந்த இலட்சியத்தை நிறைவேற்றிடவும், தந்தைப் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் கண்ட கனவுகளை நனவாக்கிடமும், இளைஞர் அணியின் முன்னெடுப்பினை நமது கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதல்வர் அவர்களும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் கலைஞரது நினைவு நாளில் இந்தத் திட்டங்களை அறிவித்தது நாட்டுக்கே முன்னோடி! கலைஞரது நினைவுக்கு ஓர் மணி மாலை!

தமிழ் இனக் காவலர், முத்தமிழறிஞர் கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நமக்கு வழங்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்களை தமிழ் மக்களிடம் கொண்டு சேர்த்து, "புதியதோர் உலகு செய்வோம்"!

"அறம் வெல்லும்; அநீதி வீழும்"

தமிழ் கா.அமுதரசன்
மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருவரங்கம் மு. நடராசன்
ஆகஸ்ட் 9 (2003)

கழகம் தொடங்கியபோதே, உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், இரயில்வே துறையில் பணியாற்றியபோது, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற காரணத்தால், தனது ரயில்வே பணியை இழந்து, முழுநேர கழக பணியாற்ற தொடங்கியவர்.

1960ஆம் ஆண்டு அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர் ஆகிய ஒருங்கிணைந்த தாலுக்கா உள்ளடக்கிய திருச்சி தாலுக்கா வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

திருச்சி மாவட்ட பஞ்சாயத்து கோர்ட் தலைவராகவும் – திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனை ஆர்.எல்.யூனியன் நிவாகியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1953ல் நடைபெற்ற கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம் – 1957ல் நடைபெற்ற நங்கவரம் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "கழகத்தின் மூத்த தொண்டர்களில் ஒருவரும் – அண்ணா திருச்சிக்கு வரும்போதெல்லாம் அவருக்கு தொண்டற்றியவர்களில் ஒருவரும் – அன்பிலார் மாவட்டச் செயலாளராக பணியாற்றிய காலத்திலே, மாவட்டக் கழகத்திலேயே தங்கி, அல்லும் பகலும் பணியாற்றியவர்" என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

புதுச்சேரியில் கலைஞர் 7-ஆம் ஆண்டு நினைவு நாள்!

இரா.சிவா தலைமையில் அமைதிப் பேரணி!

புதுச்சேரி, ஆக. 9 –

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7–ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

புதுச்சேரி சுதேசி மில் அருகில் மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் தலைமையில் தி.மு.க.வினர் ஒன்றிணைந்து அமைதி பேரணியாக சென்று அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி.கோபால், வே. கார்த்திகேயன், வெ.ராமசாமி, ப. செல்வநாதன், பா.செ.சக்திவேல், ந. தங்கவேலு, பெ.வேலவன், வீ.சண்முகம், ஜெ.வேலன், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர்.ரவீந்திரன், டி. செந்தில்வேலன், கே.பி. இளம்பரிதி, பெ.பழநி, மு.பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே.மாறன், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதா குமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், செ.ராதாகிருஷ் ணன், ம.கலைவாணன், சி.சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணி மாறன், தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு. ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், விவசாய தொழிலாளர் அணி ப. தவமுருகன், தொழிலாளர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தாமோ. தமிழசரன், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ.ஷாஜகான், மகளிர் தொண்டர் அணி சுமதி மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னதாக காலை 8 மணிக்கு வில்லியனூர் தொகுதி திமுக சார்பில் அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் திருவுருவப் படத்திற்கும், அரியாங்குப்பம் தொகுதி திமுக சார்பில் வீராம்பாட்டினத்தில் உள்ள கலைஞர் திருவுருவச் சிலைக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதேபோல், புதுச்சேரியில் உள்ள 23 தொகுதிகளில் அந்தந்த தொகுதி கழகம் சார்பில், கலைஞர் திருவுருவப் படம் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோ. செங்குட்டுவன்
ஆகஸ்ட் 9 (1996)

பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.

கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.